Kanton Zürich
Bildungsdirektion
Volksschulamt
Pädagogisches, Lehrplan 21

Kontakt: Projekt Lehrplan 21, Projektleitung, Walchestrasse 21, 8090 Zürich
Telefon 043 259 22 99, lehrplan21@vsa.zh.ch

**Tamilisch**

# இரண்டாம்நிலை (Sekundarstufe) பாடசாலை சான்றிதழ் (சுழற்சி 3)

## பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களுக்கான தகவல்கள்

### கற்பித்தல், படிப்பது மற்றும் மதிப்பீடுபற்றிய விபரங்கள்

கற்பித்தல், படிப்பது மற்றும் படிப்பின் முன்னேற்றத்தை கணிப்பிடுவதும் ஒரு வெற்றிகரமான கல்வியை பகிருவதின் அடிப்படையாகும். மாணவர்கள் அவர்களின் மதிப்பீட்டை அவர்களின் படிப்புக்கு ஊக்குவிக்கும் அம்சமாக உணரவேண்டும்.

பாடத்திட்டங்கள் மற்றும் கற்பித்தல் உபகரணங்களும் படிப்புக்கு அடிப்படையாக அமையும். இதன் அடிப்படையில், ஆசிரியர்கள் கற்ப்பித்தலுக்கான இலக்குகளை அமைக்கிறார்கள். மாணவர்களின் திறமைகளை வளர்க்கும்விதமாக ஆசிரியர்கள் மாணவர்களை ஊக்குவிக்கிறார்கள் மற்றும் சவால்களை அமைக்கிறார்கள். மாணவர்களின் படிப்பின் முன்னென்றம் மற்றும் அவர்களின் நடத்தை பற்றிய கருத்துக்களையும் ஆசிரியர்கள் தெரிவிப்பார்கள். இது மாணவர்களுக்கு அவர்களின் படிப்பு முன்னேற்றும் பற்றிய நிலமையை விளங்க உதவும் மற்றும் அவர்களின் அடுத்த கட்ட படிப்புக்கு வழிகாட்டும். மாணவர்கள் தேவையான திறன்களை அல்லது தேவையான கற்றல் இலக்குகளை அடைத்திருக்கிறார்களா என்பதை ஆசிரியர்கள் அவ்வப்போது கண்காணிப்பார்கள் .

### எப்படி ஒரு சான்றிதழ் அமைக்கப்பட்டிருக்கும்?

ஆசிரியர்கள் ஆண்டுக்கு இரண்டு முறை சான்றிதழை வழங்குகிறார்கள்: இது ஜனவரி இறுதியில் மற்றும் பள்ளி ஆண்டு முடிவிலும் வழங்கப்படும். வகுப்பில் நடக்கும் கண்காணிப்புக்கு அமையை இந்த மதிப்பெண்கள் வழங்கப்படும்.
பாடத்திட்டத்திலிருக்கும் அனைத்து பாடங்களுங்கும் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

முக்கிய காரணங்களுக்காக மதிப்பெண் கணிப்பிட முடியாவிட்டால், அது தவிர்க்கப்படலாம். பாடத்திட்டத்தில் இல்லாத திறமைகளுக்கு மதிப்பெண் சேர்க்கப்படாது (உதாரணமாக விளையாட்டு பயிற்சிகள், தட்டச்சு பயிற்சிகள்).

மொழி பாடங்களின் மதிப்பெண் பின்வரும் திறமைகளை உள்ளடக்கும்: விளக்குவது, வாசித்தல், பேசுவது மற்றும் எழுதுதல். கணித பாடத்தின் தேர்ச்சி அல்ஜிப்ரா (Algebra) மற்றும் கேயோமெட்ரி (Geometrie) திறமைகளை கொண்டிருக்கும். .

இயற்கை (Natur), மனிதன் (Mensch), சமுதாயம்  (Gesellschaft) தொடர்பான பாடப்பிரிவியில்   கீழ்க்காணும் பாடங்களுக்கு மதிப்பெண் வழங்கப்படும்:

- இயற்கை மற்றும் தொழில்நுட்பம் (உயிரியல் - Bilology, வேதியியல் - Chemistry மற்றும் இயற்பியல்- Physics)
- காலங்களும் சமுதாயமும் (புவியியல் மற்றும் வரலாறு )
- பொருளாதாரம், வேலை, வீட்டுப்பராமரிப்பு
- மதங்கள், கலாச்சாரங்கள், நெறிமுறைகள்

3 வது செகுண்டர் வகுப்பின் ப்ராஜெக்ட் பாடத்திட்டத்தின்படி, மாணவர்கள் ஒரு ஆய்வு செய்து அதன் அறிக்கையும் சமர்பிப்பார்கள். இதற்கும்  ஒரு மதிப்பெண் வழங்கப்படும்.

6 முதல் 1 வரையான மதிப்பெண்கள் ஒரு பாடத்தில் அடையும் தேர்ச்சியை குறியிடும். இவை ஒரு ஆண்டில்  முதல் மற்றும் இரண்டாம் தவணையில் ஒரு மாணவர் படிப்பில் அடைந்த முன்னேற்றத்தை வெளிப்படுத்தும். ஒரு மதிப்பெண் சான்றிதழ் ஆசிரியரின் தொழில்சார்ந்த தீர்மானங்களை  அடிப்படையாகக் கொண்டது. அது மாணவரின் எழுத்து மூல பரிட்ச்சையில் கிடைத்த  சராசரி மதிப்பெண் மட்டும்  இல்லை. ஆசிரியரின் கணிப்பீட்டில் உதாரணமாக மாணவரின் பேச்சுத்திறன், வாய்வழி மற்றும் எழுத்துமூல பரீட்சைகளின்  பெறுபேறுகள், மாணவரின் ஆக்கங்கள், விரிவுரைகள் ஆகியவை ஆசிரியரின் மதிப்பெண் தீர்மானத்துக்கு பயன்படுத்தப்படும்.

சான்றிதழின் தரவுகள் பின்வருமாறு வரையறுக்கப்படுகின்றன:

| மதிப்பெண் | 6 | 5 | 4 | 3 | 2 [மற்றும்] 1 |
|---|---|---|---|---|---|
| | மிக சிறப்பான தேர்ச்சி<br>Sehr gut | சிறப்பான தேர்ச்சி<br>gut | போதுமான தேர்ச்சி<br>genügend | தேர்ச்சி இல்லை<br>ungenügend | மிகவும் குறைந்த நி லைமை<br>(sehr) schwach |
| விளக்கங்கள் | [மாணவர் அல்லது மாணவி  ...] | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பாடத்திட்டத் தின் இலக்கை அடைந்த நி லைமை | பாடத்தின் மிக கடினமான இல க்குகளையும் வெற்றிகரமாக அடைகிறார் | பாடத்தின் இலக்குகளையும் சில கடினமான இலக்குகளையும் சரியாக அடைகிறார் | பாடத் தின் அடிப்படை இலக்குகளை அடைகிறார். | பாடத் தின் அடிப்படை இலக்குகளில் சில வற்றை இன்னும் அடையவில்லை . | பாடத் தின் அடிப்படை இலக்குளில் பலவ ற்றை இன்னும் அடையவில்லை |
| வேலைகளை சரியாக செய்வது | கடினமான வேலைகளையு ம் சிறப்பாக செய்கிறார் | சில கடினமான வேலைகளையும் சரியாக செய்கிறார் | அடிப்படை வேலைகளை சரியாக செய்கிறார் | அடிப்படை வேலைகளை தேவைப்பட்ட அ ளவில் சரியாக செய்வதில்லை | அடிப்படை வேலைகள் அனை த்தும் சரியாக செய்வதில்லை |

பின்வரும் அம்சங்கள் மதிப்பெண் தீர்மானத்துக்கு சேர்க்கப்படுவதில்லை: உதாரணமாக ஊக்கமற்ற நிலைமை, வகுப்பறையில் பாடத்தில் அக்கறையின்மை, கவனக் குறைவு, கவனமாக படிப்பது, ஊக்கமாக செய்ல்படுவது. ஆனால் மேல் குறிப்பிடப்பட்ட மாணவர்களின் செயல்பாடுகள் மற்றும் பழக்கவழக்கங்கள் தொடர்பான விடயங்கள் தேர்வு அறிக்கையின் இரண்டாம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

கற்றல் மதிப்பீடு மற்றும் பழக்கவழக்கங்கள் தொடர்பான மதிப்பீடுகள் நான்கு பிரிவுகளில் கணிக்கப்படும். இடது புறத்திலிருந்து இரண்டாவது நெடுவரிசையில் (gut) உள்ள கணிப்புகளுக்கு அமைய வழமையாக வழங்கப்படும்.

**சான்றிதழ் படிவம்**

செங்குந்தர்வகுப்பு (Sekundarstufe) இரண்டு அல்லது மூன்று பிரிவுகளை கொண்டிருக்கும்: A மற்றும் B, அல்லது A , B மற்றும் C. பிரிவு A மிகவும் தேர்ச்சி உடையது. மாணவர்கள் அவர்களின் திறமைக்கு அமைய திறைமை பிரிவு I, II மற்றும் III வில் அதிகபட்சமாக மூன்று பாடங்களை படிக்க முடியும். இதில் பிரிவு I மிகவும் திறைமையானா பிரிவு.

சான்றிதழ்கள் அனைத்தும் வகுப்பு ஆசிரியரால் பாதுகாப்பாக பராமரிக்கபடும். அனைத்து சான்றிதழ்களும் பாடசாலை மாற்றத்தின் போதும் மற்றும் பாடசாலை முடிவிலும் மாணவர்களிடம் கையளிக்கப்படும்.

பள்ளிக்கல்வி, மதிப்பீடு, சான்றிதழ்கள் மற்றும் கண்காணிப்புகள் பற்றிய கூடுதல் தகவல்களை பின்வரும் இணையப்பதிவில் காணலாம்: www.volksschulamt.zh.ch > Schulbetrieb & Unterricht>Zeugnisse & Absenzen